**சிவகங்கை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(26-09-2015 – 30-09-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 25-09-2015

**கடந்த கால வானிலை 22-09-2015 முதல் 24-09-2015 வரை**

| **காரணிகள்** | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.9 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25-27 |
| மேக மூட்டம் | 4-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-86 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 10-14 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 30-09-2015 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | **26.09.15** | **27.09.15** | **28.09.15** | **29.09.15** | **30.09.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 9 | 28 | 30 | 25 | 26 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 37 | 35 | 35 | 35 | 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24 | 23 | 23 | 23 | 23 |
| மேக மூட்டம் | 5 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 75 | 76 | 78 | 79 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 72 | 80 | 85 | 86 | 88 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 13 | 13 | 13 | 13 | 13 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி:**

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், எள்ளு, பருப்பு வகைகள் மற்றும் கரும்பு**

**பருவம்: நெல்- முளைக்கும் பருவம்**

- விவசாயிகள் விளை நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மழை நீரை சேமித்து வைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்படுகின்றன. ஏனெனில் இந்த மழை நீரை பயன்படுத்தி வறட்சி காலங்களில் பயிர்களுக்கு பாசனம் செய்யவதற்குப் பயன்படுத்த முடியும்.
- நெல் பயிரைத் தாக்கும் தண்டுத் துளைப்பான் பூச்சியினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்டேப் ஹைட்ரோகுளோரைட் 50 % SP @ 400g/ac அல்லது பாஸ்போமிடான் 40% SL 500 ml/ac தெளிக்கவும்.
- நெல் பயிரைத் தாக்கும் மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணை 2% அல்லது வேப்பங்கொட்டை சாறு 5% அல்லது தையோமீத்தாகசம் 25 WG லிட்டருக்கு 0.6 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.
- நெல் பயிரில் தாக்கும் பச்சைத் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த Phosalone 35% EC 120 ml/litre தெளிக்கவும்.
- நெல் நாற்றங்காலை நன்றாக கவனித்து நெற்பயிரில் குலை நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் தென்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த Carbendazim or bavistin @ 2.0gram/litre of water என்ற அளவில் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.